# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATHAM, VELLORE DISTRICT.

## C.C.No.261/2019

DEPOSITION OF WITNESS P.W.5

| | | |
|---|---|---|
| NAME | : | BABU |
| HUSBAND NAME | : | SABAPATHI |
| VILLAGE | : | K.VALASAI |
| OCCUPATION | : | COOLIE |
| AGE | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 25th day of April 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் கே.வலசை கிராமத்தில் வசித்து பால் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி எனது மாமா ஆவார். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 30.11.2015 ம் தேதி மதியம் சுமார் 2.30 மணிக்கு பாலகிருஷ்ணன், என் தங்கையின் கணவர் போட்ட போர்வெல் பைப்பில் தண்ணீர் எடுக்க வந்த போது அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டு பாலகிருஷ்ணன் கத்தியால் அவரது தம்பி கண்ணையனை இடது கன்னத்தில் வெட்டிவிட்டதாக தகவல் சொன்னார்கள் என்றும், நான் சென்று என் தங்கை கணவரை குடியாத்தம் அரசு மருத்துவமனையில் சேர்த்துவிட்டதாகவும் அதன் பின்பு வேலூர் மருத்துவமனையில் சேர்த்துவிட்டதாகவும் கூறிவிட்டு தற்பொழுது ஆஜர் எதிரி எனது உறவினர் என்பதால் அரசுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**Sd/-R.Saranya.,B.A.,LLB.,(Hons)LLM.,**

**Judicial Magistrate,**

**Gudiyatham.**